ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2089/51 - 2018 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2018.09.21
2089/51 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 (1) ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கற் கட்டளையை இரத்துச் செய்தல்*

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழ் கட்டளை பிறப்பிக்கப்பட்டு, 2017, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2047/13 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 309 ஆம் இலக்க கட்டளையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளதும் இங்கு கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுமான காணித் துண்டுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

எனினும், அக் காணித் துண்டுகளின் உடைமை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. எனவே காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிய 2047/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2017 ஆம் ஆண்டின் 309 ஆம் இலக்கக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது குறிப்பு இல. : 4-3/15/2017/வீஈ/363.
பிரதேச செயலாளரின் குறிப்பு இல. : வைஏகேஜ/எல்ஏஎன்/01/03/14-II.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
“மிஹிகத மெதுர”, காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூலை 22.

#### அட்டவணை

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், யக்கலமுல்லை பிரதேச செயலாளர் பிரிவில், நாக்கியாதெனிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2017.10.19 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஜீஏ/வைகேகே/2017/1072 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டுகள் ‘ஏ’, ‘பி’, ‘சீ’, ‘டீ’ எனக் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட நான்கு (04) காணித் துண்டுகளின் எல்லைகள்:


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*01.* **துண்டு ‘ஏ’ – நாக்கியாதெனிய வத்த – விஸ்தீரணம் : *0.0638* ஹெக்டயார்**

*வடக்கு: துண்டு பி ; கிழக்கு: வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த ; தெற்கு: வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த மற்றும் துண்டு பி ; மேற்கு: துண்டு பி.*

*02.* **துண்டு ‘பி’ – விஸ்தீரணம் : *0.1361* ஹெக்டயார்**

*வடக்கு: துண்டுகள் சீ, டீ, ஏ மற்றும் வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த; கிழக்கு: துண்டுகள் டீ, ஏ மற்றும் வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த; தெற்கு: துண்டுகள் ஏ, டீ மற்றும் வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த ; மேற்கு: துண்டு சீ மற்றும் வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த.*

*03.* **துண்டு ‘சீ’ – நாக்கியாதெனிய வத்த – விஸ்தீரணம் : *0.5917* ஹெக்டயார்**

*வடக்கு: வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த மற்றும் துண்டு பி ; கிழக்கு: துண்டு பி ; தெற்கு: துண்டு பி ; மேற்கு: துண்டு பி மற்றும் வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த.*

*04.* **துண்டு ‘டீ’ – நாக்கியாதெனிய வத்த – விஸ்தீரணம் : *0.1434* ஹெக்டயார்**

*வடக்கு: துண்டு பி ; கிழக்கு: வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த ; தெற்கு: வட்டவல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் நாக்கியாதெனிய வத்த மற்றும் துண்டு பி ; மேற்கு: துண்டு பி.*

*10-164*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*